பாடம்
12

# இரக்கமுள்ள இயேசு

அம்மா, சில நாடுகளில் உணவு பற்றாக் குறை இருப்பதாக எங்கள் வகுப்பாசிரியர் இன்று பின்னேரம் எங்களுக்குச் சொல்லித் தந்தார் என்று சாந்தி கூறினாள்.

"ஆம் அம்மா எங்களுக்கும் சொல்லித் தந்தார்கள், எமது நாட்டிலும் எதிர்காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படுமாம் என்று. ஆனபடியால், விளைச்சல்கள் மட்டில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சொன்னார்கள் என்று நிமல் கூறினான்.

ஒரு பையனிடம் 5 அப்பங்களும் 2 மீன்களும் இருந்தன. அதை இயேசு வாங்கினார். உங்களுக்குத் தெரியுமா இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த சம்பவம் என்று அம்மா கேட்டாள். இல்லையே. அம்மா அதை எங்களுக்குச் சொல்லுங்கள் என்று பிள்ளைகள் இருவரும் கேட்டார்கள். ஆம்.. அப்படியானால் கவனமாகக் கேளுங்கள் என்று சொல்லி அம்மா ஆரம்பித்தார்.

அன்று ஏராளமான மக்கள் இயேசுவைச் சூழ்ந்து கொண்டிருந் தார்கள். இயேசு இறைத் தந்தையைப் பற்றி அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். மாலை நேரமாகிவிட்டது. மக்களுக்கும் பசி எடுத்தது. உணவு வாங்குவதற்குக் கடைகளுமில்லை. ஆகவே, சீடர்கள் இயேசுவிடம் வந்து இங்கே உணவு வாங்க இடமில்லாத படியால் மக்களை அனுப்பிவிடுமாறு கேட்டனர். அதற்கு இயேசு, நீங்களே இவர்களுக்கு உணவு கொடுங்கள் என்று சொன்னார். ஐயாயிரம் பேருக்கு உணவு வாங்க எங்கே போகலாம். சீடர்கள் தங்களுக்குள்ளே சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு பையனிடம் 5 அப்பங்களும் 2 மீன் களும் இருந்தன. அதை இயேசு வாங்கினார். இறைத் தந்தைக்கு நன்றி கூறிவிட்டு இதைக் கொண்டு போய் மக்களுக்குப் பரிமாறுங்கள் என்று கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். எல்லோரும் வயிறார உண்டு திருப்தி அடைந்தார்கள். எஞ்சிய துண்டுகளை 12 கூடைகளில் நிரப்பினார்கள்.



எவ்வளவு பெரிய அதிசயம் அம்மா? இயேசு மிகவும் நல்லவர் அல்லவா? அவர் இரக்கம் உள்ளவர். ஆனபடியால் நாம் இயேசுவிடம் அன்பு உடையவர்களாக இருக்க வேண்டும். என்று அம்மா கூறினார்.

### விடை எழுதுக

1. சாந்தியும் நிமலும் அம்மாவிடம் எதைக் கூறுமாறு கேட்டார்கள்?
2. இயேசு செய்த நல்ல செயல்கள் எவை?
3. இயேசு சீடர்களிடம் கேட்டது என்ன?
4. திரளான மக்கள் கூட்டத்திற்கு உணவளிப்பதற்கு இருந்தது என்ன?
5. இந்தச் சம்பவத்தின் மூலம் இயேசு எப்படிப்பட்டவர் என்று நினைக்கிறீர்கள்.
6. அப்பங்களும் மீன்களும் எவ்வாறு அதிகரித்தன என்று கூறுங்கள்.